# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## <u>ஆணை நாள். 04.08.2026</u>

## <u>முன்னிலை</u>

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். CP-2269/A/2024</u>**

திரு. கருப்பையா -- மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது), -- பொது அதிகார அமைப்பு
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
புதுக்கோட்டை- 622 005.

**<u>ஆணை</u>**

மேற்குறிப்பிட்ட வழக்கு 04.08.2026 அன்று மதுரை மாவட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு. கருப்பையா அவர்கள் நேரில் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு. ச.திருமால், பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), புதுக்கோட்டை மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 08.03.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், தமிழ்நாடு மாநில தேர்தல் அலுவலகத்தில் இருந்து கடித எண்.4163/ தேர்தல்கள்-2/2023, நாள்2/2023 கடிதம் தொடர்பான தகவல்களை வழங்கக் கேட்டு 5 இனங்களில் விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்காத காரணத்தால் மனுதாரர், 30.04.2024 நாளிட்ட பிரிவு 18(1)-ன்கீழ் புகார் மனுவை தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.08.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்களை ஏற்கனவே 09.05.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து அக்கடிதத்தின் நகல்களை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரர் ஆஜராகாத காரணத்தால் மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு முழுமையான தகவல் வழங்கப்பட்டுள்ளது இவ்வாணையத்தால் உறுதி செய்யப்பட்டு, இப்புகார் மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். CP-2269/A/2024**
**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
புதுக்கோட்டை- 622 005.

**மனுதாரர்**
திரு. கருப்பையா,
149, சேந்தன்குடி நகரம் அஞ்சல்,
ஆலங்குடி வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம்- 614 624.

Je/PA 10.08.2026